| | | |
|---|---|---|
| | **மாகாணக் கல்வித் திணைக்களம்**<br>**வடக்கு மாகாணம்**<br>**Provincial Department of Education, Northern Province** | |

| | | |
|---|---|---|
| **மாதாந்த பயிற்சி வினாத்தாள்** | | |
| **தரம் - 9** | **குடியியற்கல்வி** | யூலை – 2022 |

1. சமூகத்தின் அடிப்படை அலகு யாது?
   1. ஆலயம் 2. குடும்பம் 3. பாடசாலை 4. சந்தை
2. இலவச மண்ணில் இலவச ஊழியம் என்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டவர் யார்?
   1.ஆபிரகாம்லிங்கன் 2.மார்ஷல்ஜயகொடி
   3.தோமஸ்அல்வாஎடிசன் 4.மார்க்கோணி
3. சமநிலை ஆளுமை உள்ள பிள்ளைகளை உருவாக்கும் சமூக நிறுவனம் எது?
   1.கிராமஅபிவிருத்திச்சங்கம் 2.சமயநிறுவனம்
   3.பாடசாலை 4.எ.குடும்பம்
4. "பன்சலையின் பிதா" என அழைக்கப்பட்டவர் யார்?
   1.ஜயகொடி 2.எடிசன் 3.ஆபிரகாம்லிங்கன் 4எ.லஸ்கி
5. சட்டத்தின் பிரதான வகைகள் எத்தனை?
   1.நான்குவகை 2.மூன்றுவகை 3.இரண்டுவகை 4.ஐந்து வகை
6. சிறுவர் துன்புறுத்தல் தொடர்பாகச் செயற்படும் சட்டம் எது ?
   1.தேசியசட்டம் 2.குடியியல்சட்டம்
   3.குற்றவியல்சட்டம் 4.அரசியலமைப்புச்சட்டம்
7. பின்வருவனவற்றுள் சர்வதேச சட்டம் அல்லாதது?
   1.அரசியலமைப்புச்சட்டம் 2.சர்வதேச சமுத்திரச்சட்டம்
   3.சர்வதேச முதலீட்டுச்சட்டம் 4.சர்வதேச மனித உரிமைகள் சட்டம்
8. இலங்கைப் பொலிஸ் பிரிவின் அவசர தொலைபேசி இலக்கம் எது?
   1. 112 2. 119 3. 117 4. 118
9. இலங்கையின் பிரதான சட்ட அதிகாரி யார்?
   1.பிரதமநீதியரசர் 2.நீதிபதி 3.நீதியமைச்சர் 4.சட்டமா அதிபர்
10. இலங்கை இராணுவப்படை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
    1. 1978 2. 1972 3. 1949 4. 1951
11. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டம் எது?
    1.சர்வதேச சட்டம் 2. தேசிய சட்டம்
    3.குடியியல் சட்டம் 4.அரசியலமைப்புச்சட்டம்
12. சட்டத்தை மதிக்கும் நேர்மையான சமூகத்தைக் கட்டியெழுப்பும் திணைக்களம் எது?
    1.அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம்
    2.சட்டமா அதிபர் திணைக்களம்
    3.சுகாதாரத் திணைக்களம்
    4.மதுவரித்திணைக்களம்

kalvi.lk

13. 1998 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்கம் கொண்ட பாராளுமன்றச் சட்டத்தன் மூலம் உருவாக்கப்பட்ட அமைப்பு யாது?

1.மனித உரிமைகள் ஆணைக்குழு

2.தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

3.இணக்கசபை

4.சுகாதாரத் திணைக்களம்

14. பின்வருவனவற்றுள் சட்டத்தின் மூலாதாரங்களுள் ஒன்றல்லாதது?

1. அரசியல்யாப்பு 2.பழக்கவழக்கம் 3.சமயம் 4. மோதல்

15. சட்டமா அதிபரை நியமிக்கும் அதிகாரம் உடையவர் யார்?

1.பிரதமர் 2.ஜனாதிபதி 3.சபாநாயகர் 4.பிரதமநீதியரசர்

16. நாட்டின் சட்டம் சமாதானத்தைப் பாதுகாப்போர் யாவர்?

1.அமைச்சர்கள் 2.பாராளுமன்றஉறுப்பினர்கள்

3.சட்டவல்லுனர்கள் 4.பொலிஸார்

17. POLICE என்ற சொல்லில் POLITE என்ற ஆங்கில சொல் குறிக்கும் பொருள் எது?

1.கீழ்ப்படிவு 2.நம்பிக்கை 3.துணிவு 4.ஒழுக்கம்

18. அடிமைப்பணிக்காக பயன்படுத்தப்பட்ட பல மில்லியன் மக்களுக்கு விடுதலையளிக்கப்பட்ட ஆண்டு எது?

1. 1886 2. 1809 3.1865 4.1863

19. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?

1.இடியமீன் 2.ரைட்சகோதரர்கள்

3.மார்க்கோணி 4.தோமஸ் அல்வா எடிசன்

20. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக தகவல் கொடுக்கப் பயன்படுத்தும் நேரடித் தொலைபேசி இலக்கம் எது?

1.1929 2.1939 3.1949 4.1959

20x2=40 புள்ளிகள்

## பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01) (1) சமூகப்பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் மூன்றைப் பெயரிடுக.

(11) சமூகப்பாதுகாப்பிற்காக குடும்பத்தினால் ஆற்றப்படும் பணிகள் நான்கைக் குறிப்பிடுக.

(111) சமூக விரோதச்செயல்களைத் தடுப்பதற்காகவும் சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் செயற்படும் நிறுவனங்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

**3+4+5=12** புள்ளிகள்

02) (1) சட்டம் என்றால் என்ன?

(11) சட்டத்தின் மூலாதாரங்கள் நான்கைக் குறிப்படுக.

(111) சட்டத்தின் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

**3+4+5=12 புள்ளிகள்**

03) (1) இலங்கையில் செயற்படும் பிரதான நீதிமன்றங்கள் மூன்றைப் பெயரிடுக.

(11) இலங்கைப் பொலிஸாரால் ஆற்றப்படும் சேவைகள் நான்கைக் குறிப்பிடுக.

(111) ஓய்வு பெற்றுச்சென்ற பொலிஸ்மாஅதிபர் இத்தமல்கொட அவர்கள் POLICE என்பதற்கு வழங்கிய பொருள் விளக்கத்தைத் தருக.

**3+4+5=12புள்ளிகள்**

04) (1) இலங்கையின் முப்படைகளின் பிரிவுகள் மூன்றைக் குறிப்பிடுக.

(111) இலங்கை விமானப்படையினால் நாட்டு மக்களுக்காக ஆற்றப்படும் சேவைகள் நான்கைக் குறிப்பிடுக.

(111) a. பின்வரும் மகுடவாசகங்கள் எவற்றுக்குரியன என்பதை அதே ஒழுங்கில் குறிப்பிடுக.

அ.''தந்தை நாட்டுக்காக''

ஆ''தர்மத்துடன் இருப்பவன் தர்மத்தினாலேயே காக்கப்படுவான்''

இ.''நாட்டைச் சுற்றிய தங்கவேலி''

b. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நோக்கக்கூற்றினையும் பணிக்கூற்றினையும் குறிப்பிடுக.

**3+4+3+2=12 புள்ளிகள்**

05) (1) பிணக்கொன்றை இணக்கசபைக்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகள் மூன்றைக் குறிப்பிடுக.

(111) இணக்கசபை தொடர்பான தனிநபர் கடமைகள் நான்கைக் குறிப்பிடுக.

(111) a.நீதிமன்றம் தொடர்பான தனிநபர் கடமைகள் அல்லது பொறுப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக.

b.தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகள் இரண்டைக் குறிப்பிடுக.

**3+4+3+2=12 புள்ளிகள்**

Education கல்வி

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page